


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## SEPTEMBER

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## செப்டம்பர் - 17.09.2018

We Shine Academy™
guiding you to get through


Main Office @
**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

A-90, 3rd Street (Near K3 Police Station),
Annanagar East
Chennai, Tamil Nadu 600102.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு செய்திகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- விருதுகள்
- புத்தகங்கள்
- முக்கிய தினங்கள்












Shine Academy TM

## இந்திய நிகழ்வுகள்

- நாட்டிலேயே முதன் முறையாக **ஜம்மு - காஷ்மீர்** எல்லைப் பகுதியில் **லேசர் தொழில் நுட்பத்துடன் கூடிய வேலியை** மத்திய உள்துறை அமைச்சகம் அமைத்துள்ளது. இந்த லேசர் வேலி அமைப்போடு கண்காணிப்பு கேமராக்களும் அமைத்துள்ளது.
  - ஊடுருவல் மற்றும் சட்ட விரோத குடியேற்றங்களை தடுக்க மத்திய அரசு முன்னெடுத்துள்ள விரிவான "ஒருங்கிணைந்த எல்லை மேலாண்மை அமைப்பு" என்ற நடவடிக்கையின் கீழ் இந்த லேசர் வேலி செயல்படுத்தப்படவுள்ளது.

- இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான **'இஸ்ரோ'வில்** விஞ்ஞானியாக பணியாற்றியவர் **நம்பி நாராயணன்.** இவர் 1994–ல் இஸ்ரோவின் விண்வெளி திட்டங்களை வெளி நாடுகளுக்கு பரிமாற்றம் செய்ததாக கூறி கேரள மாநில போலீசாரால் கைது செய்யப்பட்டு, ஆதாரம் இல்லாமல் சி.பி.ஐ அவரை விடுவித்தது.
  - நம்பி நாராயணன் வழக்கில் கேரள போலீசாரால் பங்கு பற்றி விசாரிக்க ஓய்வு பெற்ற உச்சநீதிமன்றத்தின் முன்னாள் "நீதிபதி டி.கே. ஜெயின்" தலைமையில் 3 பேர் கொண்ட விசாரணை குழுவை உச்சநீதிமன்றம் தற்போது அமைத்துள்ளது**(டி.கே. ஜெயின் குழு)**

- ஒடிஷா மாநிலத்தில் "நாவாகை"(**Nuakhai**) என்னும் விவசாயத் திருவிழா தொடங்கியுள்ளது
  - "**Nua**" என்ற வார்த்தையின் பொருள் "**புதியது**" மற்றும் **"Khai"** என்ற வார்த்தையின் பொருள் "**உணவு**" என்பதாகும்

## உலக நிகழ்வுகள்

- இஸ்ரேல் நாட்டுக்கான இந்திய தூதராக இருந்த **டேனியல் கார்மனின் Daniel Carmon** பதவிக்காலம் முடிந்ததை அடுத்து சட்ட கல்லூரியின் முத்த பேராசிரியரும், வங்கி துறையில் பணியாற்றி அனுபவம் வாய்ந்த டாக்டர் **ரோன் மால்கா Ron Malka** என்பவரை அந்நாட்டுக்கான இந்திய தூதராக நியமனம் செய்து உத்தரவிட்டுள்ளார்.

- வாழ்வதற்கான சிறந்த நகரங்கள் பட்டியலை சமீபத்தில் குளோபல் மெட்ரோ மானிட்டர் Global Metro Monitor Report என்ற அமைப்பு வெளியிட்டுள்ளது. இதில் முதல் பத்து நகரங்களில் **ஆறாவது இடத்தில் இந்தியத் தலைநகரான டெல்லி** உள்ளது.
  - அயர்லாந்தின் **டப்ளின்** நகரம் முதலிடத்திலும், அமெரிக்காவின் **சான்ஜோஸ்** நகரம் 2-ம் இடத்திலும் உள்ளது.
  - இந்தியாவின் **ஹைதராபாத் 14-வது** இடத்திலும், **சூரத் 19-வது இடத்திலும்,** மும்பை 23-வது இடத்திலும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- தென்கொரியாவில் உள்ள சாங்வான் நகரில் நடைபெற்ற 52-வது உலக துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டியில் **(52nd ISSF World Championship),** இந்திய அணி 11 தங்கம், 9 வெள்ளி, 7 வெண்கல பதக்கத்துடன் மொத்தம் 27 பதக்கங்களுடன் மூன்றாம் இடம் பிடித்து சாதனைப் படைத்துள்ளது.
  - இப்போட்டியில் சீனா 43 பதக்கங்களுடன் (20 தங்கம், 15 வெள்ளி, 8 வெண்கலம்) முதலிடத்திலும் தென்கொரியா 36 பதக்கங்களுடன் (11 தங்கம், 14 வெள்ளி, 11 வெண்கலம்) இரண்டாம் இடத்திலும் உள்ளது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- புவியின் வட, தென் துருவங்களில் உள்ள பனிப் பாளங்களின் அடர்த்தி, பனிப் பாறைகள், கடலில் உள்ள பனிக் கட்டிகள் ஆகியவை எவ்வாறு வேகமாக உருகுகின்றன என்பதை பற்றிய துல்லியமான தகவல்களை அளிப்பதற்காக, **ICE Sat -2** என்னும் செயற்கைகோளை **நாசா (NASA), டெல்டா 2** என்னும் இராக்கெட் மூலம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது.

## விருதுகள்

- இந்திய அமெரிக்கரான விஞ்ஞானி மற்றும் பேராசிரியர் அருள் சின்னையான் **(Prof Arul Chinnaiyan),** அமெரிக்காவின் தேசிய

புற்றுநோய் நிறுவனத்தினால் வழங்கப்படும் **"சிறந்த புலனாய்வாளர் விருது" (Outstanding Investigator Award)** பெற்றுள்ளார்

- புற்றுநோய் பற்றிய ஆராய்ச்சிக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. இவர் மிக்சிகன் பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்து வருவது குறிப்பிடத்தக்கது.

## புத்தகங்கள்

- சத்தீஸ்கர் மாநிலத்தில் பஸ்தர் பகுதியில் உள்ள அபூஜகமத் பழங்குடிகள் பற்றிய ஆங்கில புத்தகம் "Bastar Dispatches A Passage Through the wilds" என்ற பெயரில் **"நரேந்திரா"** என்பவரால் எழுதி வெளியிடப்பட்டுள்ளது

## முக்கிய தினங்கள்

**சர்வதேச ஜனநாயக தினம் - செப்டம்பர் 15**

- ஆண்டு தோறும் சர்வதேச ஜனநாயகம் தினம் **(International Day of Democracy)** செப்டம்பர் 15 அன்று கடைபிடிக்கப்படுகிறது
  - 2018 ஆம் ஆண்டுக்கான சர்வதேச ஜனநாயக தினக் கருப்பொருள் "Democracy Under Strain Solution for a changing world.
  - It was observed for the first time in 2008.

We Shine Academy™